விரிவான அறிவித்தல்

# ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

## ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் சேய்தல் (திறந்த) – 2021

ஊவா மாகாண சபை அரசாங்க சேவையில் நிலவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைவாய்ந்த ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவையுடையவர்களிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2021.06.18 ஆகும்.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்/இயந்திரம்)
   - பயிற்சி தரம் (இரண்டு ஆண்டு பயிற்சி காலம்)
   - பயிற்சி தரம் (இரண்டு ஆண்டு பயிற்சி காலம்)
   - 111 ஆம் தரம்
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அளவு மதிப்பீட்டாளர்)
   - பயிற்சி தரம்
   - 111 ஆம் தரம்
3. வரைவாளர் – பயிற்சி தரம்
4. குடியேற்ற உத்தியோகத்தர் 111 ஆம் தரம் - ஊவா மாகாண நில திணைக்களம்
5. வாட்டு எழுதுவினைஞர் 111 ஆம் தரம் - ஊவா மாகாண சுகாதார திணைக்களம்
6. மசாஜ் செய்யுநர் 111 ஆம் தரம் - ஊவா மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்

02. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுவான தகைமைகள்:**

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவு செய்ததன் ஊடாகவோ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நன்னடத்தையுடன் மற்றும் உடல் ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(இ) ஊவா மாகாணத்தின் விண்ணப்பதாரர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன. அதற்கேற்ப, விண்ணப்பபடிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று ஊவா மாகாணத்திற்குள் குறைந்தபட்சம் பூரண 3 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவினையுடைய விண்ணப்பதாரராக இருக்க வேண்டியதோடு கிராம சேவகரினால் வழங்கப்படும் சரியான படிவத்தினூடாக வதிவினை சான்றுப்படுத்துதல் வேண்டும்.

ஊவா மாகாண சபை வரையறைக்குள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று ஊவா மாகாணத்திற்குள் 3 வருடங்கள் அல்லது அதற்கு மேலாக நிரந்தர வதிவை உடைய நபருடன் சட்ட ரீதியாக தீருமணமாகி ஊவா மாகாணத்திற்குள் குடியேறி விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவினை சான்றுப்படுத்தும் நபரிற்கு விண்ணப்பிக்க முடியும். அந்நபர்கள் எழுத்து மூல ஆவணங்கள் ஊடாக இதனை உறுதிப்படுத்துதல் கட்டாயமானதாகும்.

(ஈ) ஏதேனும் மதத்தின் மதகுரு ஒருவர் இப்பரீட்சைக்காக தோற்றுவதற்காக தகைமையற்றவராகுவார்.

(உ) சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் குறித்த சகல தகைமைகளையும் மற்றும் வயது எல்லையை விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று சகல விதத்திலும் பூரணமாக்கப்பட்டிருப்பின் மாத்திரமேயாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக மசாஜ் செய்யுநர் பதவிக்காக விண்ணப்பதாரியின் குறைந்தபட்ச உயரம் 05 அடி 03 அங்குலம் ஆக இருக்க வேண்டியதுடன் வாட்டு எழுதுவினைஞர் பதவிக்காக பெண் விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

0.3 03. **சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(அ) இப்பதவியானது நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது விதவைகள் அநாதைகள் மற்றும் விதவைகள் தபுதாரர்கள் ஓய்வூதிய கொடைக்கு பங்களிப்பு செய்ய வேண்டும். ஓய்வூதிய முறை

தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 ன் விதப்புரைகளுக்கு அமைவாக குறித்த அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(இ) ஆட்சேர்ப்பு செய்யப்படுபவர்கள் ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்ற உடன்பட வேண்டும்.

(ஈ) தெரிவு செய்யப்படுபவர்கள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை, ஊவா மாகாண சபையின் அரசாங்க சேவை நடைமுறை விதிக்கோவை, ஊவா மாகாண சபையின் ஒழுக்காற்று நடைமுறைக் கோவை மற்றும் நிதி பிரமாணக் கோவை, அரசாங்க மற்றும் மாகாண சபை அரசாங்க சேவையின் விதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் உபதேசங்களுக்கு மற்றும் அது தொடர்பில் காலத்திற்கு காலம் வழங்கப்படும் திருத்தங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

**04. சம்பள அளவீடு:**

| தொட. இல. | பதவி | பொ.நி.சு. 03/2016 ற்கு ஏற்ப சம்பள அளவீடு |
|---|---|---|
| 01 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்/இயந்திரம்) - பயிற்சி தரம் (ஈராண்டு பயிற்சி காலம்) | ரூபா. 27,140.00 |
| | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்/இயந்திரம்) - பயிற்சி தரம் (ஓராண்டு பயிற்சி காலம்) | |
| | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்/இயந்திரம்) - 111 ஆம் தரம் | MN 3-2016 - ரூபா. 31,040 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 – 57,550/- |
| 02 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அளவு மதிப்பீட்டாளர்) - பயிற்சி தரம் | ரூபா. 27,140.00 |
| | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அளவு மதிப்பீட்டாளர்) - 111 ஆம் தரம் | MN 3-2016 - ரூபா. 31,040 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 – 57,550/- |
| 03 | வரைவாளர் – பயிற்சி தரம் | ரூபா. 27,140.00 |
| 04 | குடியேற்ற உத்தியோகத்தர் 111 ஆம் தரம் | MN 3-2016 - ரூபா. 31,040 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 – 57,550/- |
| 05 | வாட்டு எழுதுவினைஞர் 111 ஆம் தரம் | MN 1-2016 - ரூபா. 27,140 – 10 x 300 – 11 x 350 – 10 x 495 – 10 x 660 – 45,540/- |
| 06 | மசாஜ் செய்யுநர் 111 ஆம் தரம் | MN 1-2016 - ரூபா. 27,140 – 10 x 300 – 11 x 350 – 10 x 495 – 10 x 660 – 45,540/- |

05. ஒவ்வொறு பதவிக்கான வயது எல்லை, கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் போட்டிப் பரீட்சையின் விடய ஆய்வு.

| தொட. இல. | பதவி, ஆட்சேர்ப்பு தரம் மற்றும் வயது எல்லை | கல்வி தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் | போட்டிப் பரீட்சையின் விடய ஆய்வு |
|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்/இயந்திரம்) - பயிற்சி தரம் (இரண்டு ஆண்டு பயிற்சி காலம்)<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம்/விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் 06 விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>அல்லது<br><br>பொது நிருவாக சுற்றறிக்கை 28/2016 ற்கு ஏற்ப தொழில்நுட்ப மற்றும் தொழில்துறை பிரிவுகளின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் | 1. நுண்ணறிவு பரீட்சை – 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br>2. விடயத்திற்கான தொழில்நுட்ப பரீட்சை – 02 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொறு விடயத்திற்கும் 40% |

| | | | |
|---|---|---|---|
| | | போது க.பொ.த. (சா/த) கல்வி தகைமைகளுக்கு சமமானதாக ஏற்றுக்கொள்ளப்படும் துறைசார் தேசிய தொழில்சார் தகைமையினை பூர்த்தி செய்திருத்தல். (NVQ 3)<br><br>மற்றும்<br><br>துறைக்கான விடயங்கள் இரண்டுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பிரிவிற்கான பாடங்கள் மூன்றுடன் (03) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (குறித்த பாடங்கள் இணைப்பு 1 ன் ஊடாக காட்டப்பட்டுள்ளது.)<br><br>மற்றும்<br><br>மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியின் பதவிக்கான துறைக்கான கற்கைநெறியினை ஆரம்பித்து தேசிய தொழில்நுட்ப சான்றிதழினை பெற்றுக்கொள்ளவதற்கான முதலாம் வருடத்தினை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் தொடர்ந்தும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.<br><br>அல்லது<br><br>இத்தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமான மூன்றாம் மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட துறைசார் வேறு பாடநெறியின் முதலாம் வருடத்தினை பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் தொடர்ந்தும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுப்பட்டிருத்தல். | புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |
| | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்/இயந்திரம்) - பயிற்சி தரம் (ஓராண்டு பயிற்சி காலம்)<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம்/விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் 06 விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>அல்லது<br><br>பொது நிருவாக சுற்றறிக்கை 28/2016 ற்கு ஏற்ப தொழில்நுட்ப மற்றும் தொழில்துறை பிரிவுகளின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் போது க.பொ.த. (சா/த) கல்வி தகைமைகளுக்கு சமமானதாக ஏற்றுக்கொள்ளப்படும் துறைசார் தேசிய தொழில்சார் தகைமையினை பூர்த்தி செய்திருத்தல். (NVQ 3)<br><br>மற்றும்<br><br>துறைக்கான விடயங்கள் இரண்டுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பிரிவிற்கான பாடங்கள் மூன்றுடன் (03) | 1. நுண்ணறிவு பரீட்சை – 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br>2. விடயத்திற்கான தொழில்நுட்ப பரீட்சை – 02 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திற்கும் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |

| | | | |
|---|---|---|---|
| | | க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (குறித்த பாடங்கள் இணைப்பு 1 ன் ஊடாக காட்டப்பட்டுள்ளது.)<br><br>மற்றும்<br><br>மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியின் பதவிக்கான துறைக்கான கற்கைநெறியினை பூரணப்படுத்தி தேசிய தொழில்நுட்ப சான்றிதழினை (சிவில்/மின்/இயந்திர) பெற்றிறுத்தல்.<br><br>அல்லது<br><br>இத்தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமான மூன்றாம் மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட துறைசார் வேறு தொழில்நுட்ப தகைமையினை பெற்றிருத்தல். | |
| | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/மின்/இயந்திரம்) - 111 ஆம் தரம்<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம்/விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் 06 விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br><br>துறைக்கான விடயங்கள் இரண்டுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பிரிவிற்கான பாடங்கள் மூன்றுடன் (03) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (குறித்த பாடங்கள் இணைப்பு 1 ன் ஊடாக காட்டப்பட்டுள்ளது.)<br><br>மற்றும்<br><br>1. மொரடுவ பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT)<br>அல்லது<br>2. தேசிய பயிற்சி மற்றும் தொழிதுறை பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியிலாளர் டிப்ளோமா (NDES)<br>அல்லது<br>3. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியலாளர் டிப்ளோமா (HNDE)<br>அல்லது<br>4. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா | 1. நுண்ணறிவு பரீட்சை – 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br>2. விடயத்திற்கான தொழில்நுட்ப பரீட்சை – 02 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திற்கும் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |

| | | | |
|---|---|---|---|
| | | அல்லது<br>5. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் 1 வது பிரிவினை வெற்றிகரமாக பூரணப்படுத்தி இருத்தல்.<br>அல்லது<br>6. தொழில் துறைக்கான தேசிய தொழில்சார் திறன் NVQ 06 மட்டத்திற்கு சமமான தகைமையினை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>7. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களில் ஆராய்ந்து கருத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல். | |
| 02 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அளவு மதிப்பீட்டாளர்) - பயிற்சி தரம்<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம்/விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் 06 விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>அல்லது<br><br>பொது நிருவாக சுற்றறிக்கை 28/2016 ற்கு ஏற்ப தொழில்நுட்ப மற்றும் தொழில்துறை பிரிவுகளின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் போது க.பொ.த. (சா/த) கல்வி தகைமைகளுக்கு சமமானதாக ஏற்றுக்கொள்ளப்படும் துறைசார் தேசிய தொழில்சார் தகைமையினை பூர்த்தி செய்திருத்தல். (NVQ 3)<br><br>மற்றும்<br><br>துறைக்கான விடயங்கள் இரண்டுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பிரிவிற்கான பாடங்கள் மூன்றுடன் (03) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (குறித்த பாடங்கள் இணைப்பு 1 ன் ஊடாக காட்டப்பட்டுள்ளது.)<br><br>மற்றும்<br><br>மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியின் தேசிய தொழில்நுட்ப (அளவு மதிப்பீட்டாளர்) சான்றிதழினை அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி | 1. நுண்ணறிவு பரீட்சை – 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br>2. விடயத்திற்கான தொழில்நுட்ப பரீட்சை – 02 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திற்கும் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனத்தில் அளவு மதிப்பீடு தொடர்பில் மூன்று ஆண்டு பகுதி நேர / முழு நேர பயிற்சி பாடநெறியினை வெற்றிகரமாக பூரணப்படுத்தி குறித்த சான்றிதழினை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களில் ஆராய்ந்து கருத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல். | |
| | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அளவு மதிப்பீட்டாளர்) - 111 ஆம் தரம்<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம்/விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் 06 விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br><br>துறைக்கான விடயங்கள் இரண்டுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பிரிவிற்கான பாடங்கள் மூன்றுடன் (03) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (குறித்த பாடங்கள் இணைப்பு 1 ன் ஊடாக காட்டப்பட்டுள்ளது.)<br><br>மற்றும்<br><br>1. மொரடுவ பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (அளவு மதிப்பீட்டாளர்)<br>அல்லது<br>2. தேசிய பயிற்சி மற்றும் தொழிதுறை பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியிலாளர் டிப்ளோமா<br>அல்லது<br>3. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியலாளர் டிப்ளோமா.<br>அல்லது<br>4. இலங்கை அளவு மதிப்பீட்டு நிறுவனத்தினால் நடாத்தப்படும் அளவு மதிப்பீட்டு பரீட்சையின் 1 வது பிரிவினை வெற்றிகரமாக பூரணப்படுத்தி இருத்தல்.<br>அல்லது<br>5. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை | 1. நுண்ணறிவு பரீட்சை – 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br>2. விடயத்திற்கான தொழில்நுட்ப பரீட்சை – 02 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திற்கும் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கிய நிறுவனங்களில் ஆராய்ந்து கருத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல். | |
| 03 | வரைவாளர் – பயிற்சி தரம்<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம்/விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் 06 விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>அல்லது<br><br>பொது நிருவாக சுற்றறிக்கை 28/2016 ற்கு ஏற்ப தொழில்நுட்ப மற்றும் தொழில்துறை பிரிவுகளின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் போது க.பொ.த. (சா/த) கல்வி தகைமைகளுக்கு சமமானதாக ஏற்றுக்கொள்ளப்படும் துறைசார் தேசிய தொழில்சார் தகைமையினை பூர்த்தி செய்திருத்தல். (NVQ 3)<br><br>மற்றும்<br><br>துறைக்கான விடயங்கள் இரண்டுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பிரிவிற்கான பாடங்கள் மூன்றுடன் (03) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (குறித்த பாடங்கள் இணைப்பு 1 ன் ஊடாக காட்டப்பட்டுள்ளது.)<br><br>மற்றும்<br><br>மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியின் வரைவியல் தொடர்பான ஒரு வருட முழுநேர பாடநெறியினை வெற்றிகரமாக பூரணப்படுத்தி குறித்த சான்றிதழினை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களில் ஆராய்ந்து கருத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல். | 1. நுண்ணறிவு பரீட்சை – 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br>2. விடயத்திற்கான தொழில்நுட்ப பரீட்சை – 02 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திற்கும் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |

| | | | |
|---|---|---|---|
| 04 | குடியேற்ற உத்தியோகத்தர் 111 ஆம் தரம்<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம்/விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் 06 விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>அல்லது<br>இணைந்த கணிதம், பௌதீக விஞ்ஞானம், இரசாயண விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியல் அல்லது உயிரியல் முறை தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலிற்கான விஞ்ஞானம் ஆகிய விடய பிரிவிற்கான விடயங்கள் இரண்டுடன் (02) கூடியதாக ஒரே தடவையில் விடயங்கள் மூன்றில் (03) க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியெய்திருத்தல்.<br>மற்றும்<br>1994.05.29 ஆம் திகதிய இலக்கம் 251 னை உடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ள குண்டசாலை, பெல்வெஹெர மற்றும் அகுணகொலபெலஸ்ஸ, இலங்கை விவசாய வித்தியாலயத்தின் ஊடாக வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழினை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>பொது நிருவாக சுற்றறிக்கை 46/90(i) மற்றும் 46/90 (ii) ஏற்ப பேராதெனியை, அம்பாறை ஹாடி நிறுவனம், எக்குவைனாஸ் வித்தியாலயம் மற்றும் அரசாங்க தொழில்நுட்ப வித்தியாலயத்தின் ஊடாக வழங்கப்படும் மூன்றாண்டு டிப்ளோமா சான்றிதழினை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>லபதுவ, வாரியபொலை, பிபிலை, அநுராதபுரை கரபிஞ்சா மற்றும் வவுனியா விவசாய வித்தியாலயத்தின் ஊடாக வழங்கப்படும் விவசாய டிப்ளோமா சான்றிதழினை பெற்றிருத்தலுடன் தொழில் துறைசார் தேசிய தொழில்சார் திறன் (NVQ 6) மட்டத்திலான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் இரண்டு ஆண்டு தொழில்நுட்ப (விவசாய) டிப்ளோமா சான்றிதழினை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>மேலே தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமானதாக கருதப்படும் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தகைமையினை பெற்றிருத்தல். | 1. நுண்ணறிவு பரீட்சை – 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br>2. விடயத்திற்கான தொழில்நுட்ப பரீட்சை – 02 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திற்கும் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |

| | | | |
|---|---|---|---|
| 05 | வாட்டு எழுதுவினைஞர் 111 ஆம் தரம்<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் ஆறு (06) விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>மற்றும்<br>கல்வி பொது தராதிரப்பத்திர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தப்பட்சம் ஒரு விடயத்திலேனும் (சாதாரண பொது பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல். | 1.உளச்சார்ப்பு – 1 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்<br>2.பொது அறிவு – 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொறு விடயத்திற்கும் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |
| 06 | மசாஜ் செய்யுநர் 111 ஆம் தரம்<br><br>வயது:<br>18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் ஒரு விடயத்திற்கு திறமை சித்தியுடன் கூடியதாக ஒரே தடவையில் ஆறு (06) விடயங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>மற்றும்<br>கல்வி பொது தராதிரப்பத்திர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தப்பட்சம் ஒரு விடயத்திலேனும் (சாதாரண பொது பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.<br>மற்றும்<br>கொழும்பு பல்கலைக்கழகம்/ களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய வைத்திய கல்வி நிறுவனம்/ கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்படும் மூன்று மாத கால மசாஜ் பயிற்சியை பூரணப்படுத்தி இருத்தல். | 1. உளச்சார்ப்பு – 1 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்<br>2.பொது அறிவு – 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்<br><br>(பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொறு விடயத்திற்கும் 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.) |

## 06. ஆட்சேர்ப்பு செய்யும் முறை:

1. வெற்றிட எண்ணிக்கையை விட அதிகமாக முறையான விண்ணப்பப்படிவங்கள் முன் வைக்கப்பட்டுள்ள போது எழுத்து மூல பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட திறன்கள் வரிசைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படும். வெற்றிட எண்ணிக்கையை விட குறைவான முறையான விண்ணப்பப்படிவங்கள் முன் வைக்கப்பட்டுள்ள போது போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படாததுடன் நேர்முகப் பரீட்சையின் ஊடாக தகைமைவாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

2. போட்டிப் பரீட்சைக்கு அமர்வதற்காக அனுமதிசீட்டினை வழங்குதல் விண்ணப்பதாரி குறித்த பதவிக்கான தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

3. போட்டி பரீட்சை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைகள் பிரிவினால் நடாத்தப்படும். போட்டிப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் முழு பரீட்சைக்குமே ஒரு மொழி மூலத்திலேயே அமருதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை முன் வைத்த பின்னர் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

4. பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஒரு வினாப்பத்திரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்தப்பட்ச புள்ளிகளின் எண்ணிக்கை 40% ஆகும்.

5. பரீட்சை திகதியன்று விண்ணப்பதாரரின் ஆள்அடையாளத்தை சான்றுப்படுத்துவதற்காக ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுப்படியாகும் தேசிய அடையாளஅட்டை, செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுப்படியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் முன்வைக்க வேண்டும். இவ் ஆவணங்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமாட்டாது.

**07. விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

1. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தாம் விண்ணப்பிக்கும் பதவிக்கான விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரையிலான பிரிவுகள் முதல் பக்கத்திலும் ஏனையன இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கங்களில் காணப்படும் விதத்தில் விண்ணப்பப்படிவத்தினை தயார்செய்ய வேண்டியதோடு, விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமர்வதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணமாக்கப்பட வேண்டும். தமிழ் மொழியில் முன் வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பானது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடபட வேண்டும்.

2.பூரணமாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2021.06.18ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “செயலாளர், ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4, பீலிபொதகமை வீதி, பிங்கராவை, பதுளை” என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உரையின் இடது மேல் மூளையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

3. குறித்த மாதிரி படிவத்திற்கு அமைவாக அமையாத, தாமதமாக கிடைக்கப்பெறும், குறைகளுடன் காணப்படும் மற்றும் பூரணமாக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தேவையான தகைமைகளை கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் தபாலில் காணாமல் போகுதல் மற்றும் தாமதமாகுதல் தொடர்பில் முன்வைக்கப்படும் எதுவித முறைப்பாடுகளும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தின் நிழல்பட பிரதியினை தம்மிடம் வைத்திருப்பது நன்மை பயப்பதாகும்.

**08. கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரினால் / சமாதான நீதவான் ஒருவரினால் / சத்திய பிரமாண ஆணையாளரினால் / பொது நொதாரிஸ் / முப்படையின் அதிகாரம் உள்ள அலுவலர் / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள பொலிஸ் சேவையின் அலுவலர்/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியினை வகிக்கும் ரூபா. 47,615/- னை அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த இணைந்த சம்பளத்தினை பெறும் நிறைவேற்று மட்ட அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிதல் வேண்டும்.

**09. பரீட்சை மற்றும் நிருவாக கட்டணம்:**

பரீட்சை மற்றும் நிர்வாக செலவீனம் ரூபா. 900/- ஆகும்.

இத்தொகையை ஊவா மாகாண பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கப்படும் வகையில் ஊவா மாகாணத்தில் காணப்படும் எந்தவொரு பிரதேச செயலாளர் காரியாலயத்திலும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

பற்றுச்சீட்டின் முதல் பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்ப வேண்டியது கட்டாயமாகுவததோடு, தேவை கருதி அதன் நிழல்பிரதியினை தம்மிடம் வைத்திருத்தல் நன்மை பயப்பதாகும். ஊவா மாகாண பிரதேச செயலாளர் காரியாலயமொன்றில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டிற்கு புறம்பாக வேறு நிறுவனங்களில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளைகள் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன், எந்தவொரு காரணத்திற்காகவும் இப்பரீட்சை கட்டணமானது திருப்பி செலுத்தப்படமாட்டாது.

**10. போலியான தகவல்களை வழங்குதல்:**

இப்பரீட்சையில் அமர்வதற்காக பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமை இல்லை என தெரிய வந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைப்பெறும் போதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்பத்திலோ அவரின் பரீட்சை உரிமை இரத்து செய்யப்படும். சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் விண்ணப்பதாரர் வழங்கிய யாதேனும் தகவல் பொய்யானதாக அல்லது வேண்டுமென்றே பொய்யான

தகவல்களை வழங்கியுள்ளார் என தெரிய வந்தால் அல்லது பிழையான தகவல்களை வேண்டும் என மறைத்துள்ளார் என தெரிய வந்தால் அவரின் சேவையானது முடிவுறுத்தப்படும்.

13. இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் / செய்யாமலிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையினது ஒரு பகுதியினை நிரப்புதல் அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்ப்பில் அல்லது இது தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்ப்பில் இறுதித் தீர்மானமானது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும். அதேபோல இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின் அது தொடர்ப்பில் விவரித்தல் / தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு ஊடாக மேற்கொள்ளப்படும்.

காமினி மஹிந்தபால ஜோபியஸ்
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

2021.05.07 ம் திகதி
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு
பதுளை.